# திறவுகோல்

2056\தை

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# கனுக் காணும் இருள் விழிகள்

எனது கனவுகளில் எப்பொழுதும்
இரு விழிகளே
ஆக்கிரமிக்கின்றன
ஒன்று ஏக்கத்திலும்
மற்றொன்று கோவத்திலும்
விழி உருட்டுகின்றன...!

அவைகள்
காண்கின்ற அனைத்தையும்
இரண்டாகத்தான் பிரித்து
உணர்கின்றது மனது
இருளை ஒளியாகவும்
ஒளியினை இருளாகவும் காண்கின்ற
கண்களைத்தான் அவை
பெற்றிருக்கின்றன..!

நான் கண்களை பொத்திக் கொண்டு
விளையாடும் பொழுதெல்லாம்
மறைந்தவர்கள் முன்னும்
கடந்தவர் பின்னும் வந்து செல்கின்றனர்
நான் கருப்பு துணியை
கட்டிக்கொள்வதன் அவசியமில்லாமல்
ஆயிற்று..!

அலங்கார ஆசைகளில் நான்
மூக்கு கண்ணாடி அணிவதில்லை
கண்ணுக்கு எதிரே
இருந்தும் இல்லாமல்
இதுவா அதுவாவென
அறிய இயலாத கண்களுக்கு
அருகிலும் தூரமும்
அழகும் குளிர்விப்பும்
அவசியமாயென்ன..!

விழிகளை வானுயர்த்தி
வாலாட்டி காத்திருக்கும்
கருமை நிற எலியாகவும்,
வானை மட்டும் பார்த்துக் கொண்டே
இருளை நிமிர்ந்து பார்க்கும்
வாலில்லா
இருள் சிறகு ஆந்தையாகவும்
நடைபோடந் துவங்கிவிட்டேன்

இப்போது என்னை
பறவையெனலாம்
விலங்கெனலாம்
கண்களை மட்டும் மூடிவிடச்
சொல்ரிவிடாதீர்
நான் குருடாகிப் போய் விடுவேன்
மனிதர்கள் மத்தியில்...

## தினம் தினமும்

கைகூப்பி வணங்கி நின்றதும்
காற்றோடு உறவாடி
பூவை கைக்கூப்பலில்
தள்ளுகிறாய்
கடவுள் என்றுதான்
நகர்ந்து செல்கிறேன்
கல்லாக இருக்கிறாய்
தட்சணை இல்லாத
எனது நகர்வுதனில்......

வானத்தில் தனிமையாய்
கால் தடுக்கும் கல்லாய்
பூ பறிக்கும் விரலாய்
நாய்கள் துரத்தும் குரலாய்
நெல்மணி கொத்திடும் அலகாய்

அவ்வப்போது மாறும்
திசையாய்....
நீளும் நடுநிசியாய்
இருக்கதான் செய்கிறது...

சந்தையில் சுனங்கிய பூக்களெல்லாம்
பறிக்கும் பொழுது
புன்னகைத்துக் கொண்டேதான்
வருகின்றன
ஒரு வேகத்தடை கடந்தபிறகுதான்
விழுத்தொடங்கியது
வாசனைக் கடந்த பூவொன்று

## நிழல் உண்ணும் நிர்வாணம்

எனது
மௌனத்தின்
நிர்வாணத்திற்கு
யாரும் ஆடை போர்த்த இயலாது

கிழிந்த ஆடையுடுத்திய
மென்மையான வசைகளுக்கு
ஆதரவை ஒட்டுவைக்கும்
மனங்களுக்கு நிர்வாணம் ஒன்றும்
பெரியதோர் விடயமல்ல

சுல்லென படும் வெயிலில்
மார்போடு அனைத்துறங்கும்
வெட்கமெனும் ஆடைக்கு
ஓரமடித்து உடுத்தி அழகு பார்த்திட
மென்மையான மௌனங்கள் ஒருபோதும்
சம்மதம் கொடுப்பதில்லை

சிறு வெட்கம்
சிறு தயக்கம்
மீளும் பயமென இருளையணைத்து
விழியை மட்டும்
விழித்து மூடும்
கையேந்திய நிர்வாணத்தைதான்
நீங்கள் அழகென்றும்
ஆசைகளின் இனிப்பென்றும்
சொல்கிறீர்கள்

ஆடைகளின் விலகலும்
ஆசைகளின் கரங்களும்
அவ்வப்போது
ஆகாயம் வரை அந்தரங்களை
குடைபிடித்து கொடியசைத்து
உறக்கச் சொல்கிறது
இடைவரை தூக்கி நகர்ந்த
நிர்வாணத்தின் கூச்ச எடைதனை

சற்று அதிகம்தான்
ஆசையைக் காட்டிலும்
அதிகம் மிளிரும்
நிழல் உண்ணும் நிர்வாணம்..!

## அவனை அவன் கையில் கொடுங்கள்

அவனுக்கு அவன் கையில் ஒன்றைக்
கொடுங்கள்
அது அவனாக இருந்தால் மிக்க நன்று
வேறொருவராய் இருந்தால்
சற்று கடினம்தான்

இவனை இவனே தனது கரத்தோடு
பூட்டி விளையாடும்
தருவாயில் தான்
அவன் அவனையே பார்த்தான்

இருந்தாலும் இவனுக்கு அவன் மீது
அன்பு அதிகம்
அவனால் கிடைத்த எதையும்
இவன் ஒருபோதும் மறுத்ததில்லை
இவனுக்கு நன்றாக தெரியும்
அவன் இவனைப்போல் இல்லையென்று

அவனும் இவனும்
பேசுதலை தொடங்கி
அவனுக்காக இவனும்
இவனுக்காக அவனும் பேசத்
தொடங்கியதும்
அவனைப் போல் ஒன்றும்
இவனைப் போல் ஒன்றும்
ஒன்றி வருகிறது சொற்களில்

அவனுக்கு அப்போதே தெரியும்
இவனுக்கும் அவனுக்கும் ஆகாத
வார்த்தைகள் இன்றும் புலக்கத்தில்
உள்ளதென்று
இதுவரை பேசியதில் கடைசியாக
இருவரும் சொல்லிப் பிரிந்தனர்

அவனை அவன் கையில்
கொடுங்களென்று...!

## கிழித்தெறிந்த கனவுகளில் அரைபாதி நான்:

நான் காற்றுடன் பேசத்தயாராகும்
பொழுதெல்லாம்
தென்றலாய் என்னுடன் பயணப்படத்
தயாராகி நின்றது
அந்த சன்னலோர இருக்கையை மட்டும்
நான் யாருக்காகவும்
இல்லை
யாருக்கும் விட்டுக் கொடுத்ததில்லை

எனது பால்ய கனவுகளையும்
காதல் கதவுகளையும்
சன்னலுரசிய எனது
கன்னங்களினுடே
எனது அருகில் அமர்ந்து நகர்ந்த
இயற்கையின் கைப்பிடிக்க
நான்
விட்டுக் கொடுத்ததேயில்லை

தூரத்து செவ்வானத்தில் முயலின்
ஓட்டமும்
மின்னலொளியை இந்திரன் துரத்தும்
காதல் விளையாட்டையும்
பாட்டியின் கதைகேட்டு
மனதோடு படம் வரைந்து அசைபோடத்
தொடங்கிய பட்டாணி பயணங்களை
நான்
விட்டுக் கொடுத்ததேயில்லை

தென்றல் அங்கு தென்றலாய் மட்டும்
வீசட்டும்
நான் விட்டுக் கொடுக்கிறேன்
காற்றின் பறந்த பட்டாணி துகள்களின்
வேகத்துனூடே.....
நான்
இறங்கும் தருவாயில்
அனைத்து கனவுகளையும்
ஏழரை ருபாய் டிக்கெட்டில்
அரைபாதி கிழுத்தெடுத்த
கன்டக்டரின் கைகளோடு
முடிவடைகிறது
நான் போனால் போகட்டுமென

விட்டுக்கொடுத்த
இன்னொரு பயணியின்
கனவுகளின் தொடக்கம்....

## பறவையும் பரவையும் ஒரே சாயலில்:

ஒரு மௌனம் பிறக்கிறது
ஒரு கனி இனிக்கிறது
யாரும் பேசாமல்
இருப்பதுதான் வெறுமை

உளி உடைவதற்குள்
உனை நீ செதுக்கிவிடு
பரந்து கிடப்பதெல்லாம்
பரவையென பெயரில்லை

நான் உண்மையை சொல்லி
பரிசில் பெற வரவில்லை
பொய்யில் புலவரின்
நிழல் கீழ் எறும்பே மேல்

காற்றை விழுங்கி
கானம் கூவியது குழல்
காதுகளில் பஞ்சடைத்தபிறகும்
கானம் பாடுகிறாள் கிழவி

உனை ஏமாற்றிட
சாதூர்யம் தேவையில்லை
நம்பிய விடயத்தை
கொடுக்காமல் செய்தால் போதும்

அப்பாவின் சாயலில்
பிறந்துவிட்டேன் நான்
சுகம் அறிந்து
சுமையறிகிறேன்...

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.



# குறுங்கவிதைகள்

சோலையில் தன் கூடு
இப்போது எதை தேடுகிறது
அந்த பறவை ..

இரவு மின்சாரம் துண்டிக்கப்பட்டதும்
வாசலில் வட்டமிடுகின்றது
மின்மினிப்பூச்சி ..!!

பறவைகள் வந்தமர்ந்ததும்
கீழே விழுகின்றன
முதிர்ந்த விதைகள் ...!!

—

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.
+91 8867933021

# இன்று எல்லாரும் இருக்கிறர்கள்

நாளை கிளம்பி விடுவார்கள்
குழந்தைகளைப் போல்
சிரித்து விளையாடி மகிழ்ந்து
நாளை அழுது கொள்வதா
பெரியவர்களைப் போல்
இன்றிலிருந்தே
நாளையை எண்ணி
அழத் தொடங்குவதா
கொஞ்சம்
ஞானமெய்தி இருந்திருந்தால்
பட்டும் படாமலாவது இருந்திருக்கலாம்

## ஓடும் போதும்

துரத்தும் போதும்
ஆடும் போதுமென
தன் மீதிருந்த
வண்ணங்களை எல்லாம்
வந்திருந்த குழந்தைகள்
எடுத்துக் கொண்டு போக இப்போது
வெறுமையைப் பூசிக் கொண்டு நிற்கிறது
பண்டிகை முடிந்ததும் வீடு!!!

—

கி. கவியரசன்,
செங்கம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

---

# குறுங்கவிதைகள்

*1*
பூர்வீக வீடு
நாசி தீண்டியது
அப்பாவின் வாசனை

*2*
வாங்கிய இறப்பர்
அழித்துக் கொண்டிருக்கிறது
பசுமை உலகத்தை

*3*
பாட்டி இல்லை
உரலிடிக்கும் ஓசையின்றி
தனிமையில் வீட்டுத்திண்ணை

*4*
பரம்பரை ஆதனம்
பிரிக்கப்பட்டு விடுகிறது
உறவின் கரங்கள்

*5*
மனதில் பாரம்
மெதுவாக இறங்குகிறது
விழிகளில் கண்ணீர்

*6*
அன்பெனும் தலைப்பில்
சிறப்புக் கருத்தரங்கம்
முதியோர் இல்லத்தில்

*7*
தனியாளாய் உழைத்தான்
தனிமையில் வாடுகிறான்

சொத்துப் பங்கீட்டின் பின்

8
நிலத்தடி நகரம்
ஒற்றுமையான சமூகம்
எறும்புப்புற்று

9
கையில் ஏதும் இல்லை
கனமாக இருக்கிறது
குடும்ப வறுமை

10
திக்குமுக்காடுமோ?
மலர்த்தோட்டம் நுழையும்
பட்டாம்பூச்சியின் சிறுபசி

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# சென்மங்கள் அர்த்தப்படும் உன்றுல்

குழந்தை இல்லை என்பது சோதனை
மலடி என்று ஏசுவது வேதனை
உறவு நட்புகள் பேசிய நிந்தனை
தெய்வங்களை வேண்டி செய்த
பிராத்தனை

நண்பன் ஒருவர் சொன்னார் போதனை
மனதில் உதித்த புதிய யோசனை
மருத்துவ தொழில்நுட்ப தந்த சிந்தனை
செயற்கை கருத்தரிப்பு நிகழும் சாதனை

பத்து மாதங்கள் கருவில் சுமப்பு
முடிவுக்கு வந்தது அந்த காத்திருப்பு
சரியான நேரத்தில் குழந்தை பிறப்பு
இந்த சென்மத்துக்கு சாபல்யம் அளிப்பு

கையில் ஏந்தையில் நிம்மதி கிடைப்பு
தேனும் பாலும் ஊட்டி வளர்ப்பு
எதிர்கால சந்ததி விருத்தி பொறுப்பு
வாழும் வாழ்க்கை அர்த்தம் கொடுப்பு

குடும்பத்தில் மகிழ்ச்சி தந்தது களிப்பு
உதய சூரியன் தினமும் வளர இனிப்பு
சமூகத்தில் வந்தது தாய்யெனும் மதிப்பு
மகனை கட்டி தழுவிட பூரிப்பு

—

எஸ்.வீ. ராகவன்,
சென்னை

# பகுத்தறிவு முழங்கு...

சாமி இல்லை என்று சொல்வது
பகுத்தறிவா?

சாதி சண்டைகள் அகற்றுவது
பகுத்தறிவா?

மேடையில் அவதூறு மொழிகள்
பகுத்தறிவா?

இளமையில் முதுமையின் அனுபவம்
பகுத்தறிவா?

உழவு பேணுவது பகுத்தறிவா?

வீதி தோறும் மதுக்கடை பகுத்தறிவா?

உன் உடையால் மனம் கெடுகிறது
பகுத்தறிவா?

இல்லை... பெண்ணே உனக்கும்
உணர்விருக்கு பகுத்தறிவா?

நாத்திகம், பார்ப்பனீயம் பேசுவது
பகுத்தறிவா?

பசி, பட்டினியை ஒழிப்பது பகுத்தறிவா?

மடமை களைந்து சுய ஒழுக்கம் பேணி

சமுதாயம் காத்து மெய்யறிவு கண்டு
வாழ்வதே பகுத்தறிவு...

- சு. வித்யாகார்த்திக்,
பழநி.

---

# வழி பிறக்குமா?

பருவ நிலை
மாறுபாடு என்கிறார்கள்....!
வரலாறு காணாத மழை...?
வீடுகளை அடித்து சென்ற
காட்டு வெள்ளம்....?
எத்தனை நிலச்சசரிவு...!
எத்தனை வீடுகள் அழிவு...!
எத்தனை பயிர்கள் அழிவு..!
எத்தனை வறட்சி....!
எத்தனை கனவுகள் அழிவு..!
எத்தனை பட்டினிச்சாவு...!
எல்லாவற்றையும் -
எல்லா வருடமும் நிகழ்த்திவிட்டு...
இன்னும் -
எத்தனை நாள்...?
தைபிறந்தால்...
வழிபிறக்கும் என்பீர்கள் ..?
ஆண்டுக்கு ஒருமுறை...
தை பிறக்கிறது...!
ஆனால் வாழ...
வழிதான் பிறக்கவில்லை...!?



—

முனைவர் சா. சம்பத்,
தேசிய பயிற்சியாளார்,
மன்னார்குடி.

# காத்திருப்பு

அவளுக்காக
அவன் காத்திருந்த
பேருந்து நிலையங்களில்
அவளும் கூட
காத்திருந்திருக்கலாம்
யார் அறிவார்
அவள் பெண்மைக்குள்
புதையுண்ட அவளின் காதலை

## நல்லநேரம்

இப்போதெல்லாம்
குடுகுடுப்பைக்காரன்
எங்கள் தெருவுக்கு வருவதே இல்லை
அவள் குடிவந்த நாள் முதல்
நல்ல நேரம் பிறந்ததென்று

## இரவுகள்

அழகான இரவு வேளை
உன் கைகள் கோர்த்து
கதைகள் பேசும்
நாளையென்னி கழிந்துபோகிறது
இன்றைய இரவுகள்

## ஊடல்

நம் வரவை எதிர்பார்க்கும்
அம்புலிக்கு எப்படி சொல்வது
நீயும் நானும் ஊடலில் இருப்பதை...

—

ரா. சண்முகவள்ளி
ஸ்ரீனிவாசன்

---

# தமிழர் உயிரே

பா வகை: அளவடிக் குறள் வெண்
செந்துறை

பிறப்பின் வழியில் பிறந்தோம் நாமே!
பிறந்தப் பின்போ பிள்ளைத் தானே!

தமிழில் கற்கத் தருக்கும் ஏனோ?
தமிழோ மொழியின் தாய்மைத் தானே!

உலகின் மொழியில் உயிரே தமிழே
நலமே நல்கும் நன்னெறித் தமிழே!

உண்மை உணர்ந்தால் உயர்வாய்
இனிதே!
பண்பை ஊட்டும் பாங்காய்த் தமிழே!

தமிழைப் பொழுதும் தவிர்த்தால்
கொடிதே!
தமிழர் நெஞ்சினில் தமிழே உயிரே!

குன்றெனக் குணத்தில்
நிலைப்போம்!

குணத்தினை யென்றும் உயர்வெனக்
கொண்டே;
குன்றென மனத்தினில் நிலைப்போம்!
உணவினில் யென்றும் உயிர்களும்
வாழும்;
உண்மையை நெஞ்சினில் கொள்வோம்!

அறத்தினை வாழ்வில் உயிரெனக்
கொண்டே;
அன்புடன் உலகினை ஆள்வோம்!
சிறப்புடன் சிந்தை வானிலும் உயர்ந்தே;
சீருடன் வாழ்வினை வெல்வோம்!

உலகினில் மாந்தர் வாழ்வினைக்
கண்டே;
உதவிடும் உள்ளமும் உயர்வே!
நலமுடன் என்றும் யாவரும் வாழ்வோம்
நன்றென மாந்தமும் காப்போம்!

—

வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
துபாய்.



---

# பொங்கலோ பொங்கல்!

ஆதவன் எழுந்து வந்தான்
அம்மா நீ பொங்கலிடு!

கோலங்கள் நிறைந்திடவே
அம்மா நீ பொங்கலிடு!

காளையரும் பாவையரும் மகிழ்ந்திடவே
பொங்கலிடு!

அன்னை தைமாதத்தாள் அழகுடனே
வந்துவிட்டால் அம்மா நீ பொங்கலிடு!

எங்கும் சிரித்து நிற்கும்
புத்தரிசி பொங்கலிடு!

பழங்களும் நற்கரும்பும்
வரவேற்க நிறைத்து விடு!

மாடுகளும் ஆடுகளும்
மனம் மகிழ பொங்கலிடு!

தங்கப்பயிர் நிறைந்த வயலை நீ
வாழ்த்திடுவாய், அன்புடைய உறவுகளும்
மனம் மகிழ நீ பொங்கலிடு!

நம் மக்கள் மனம் மகிழ
இனிப்பாய் நீ பொங்கலிடு!

ஆதவனும் சிரித்து நிற்க
அம்மா நீ பொங்கலிடு!

பொங்கலோ பொங்கல் என்று கூவி, நாம்
மகிழ்வுடனே வாழ்ந்திடுவோம்!

—

எம். என். பாஸ்கரன்,
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு),
மன்னார்குடி.

# ஊர்க்குருவி

கவிதைத்தொகுப்பு
சதீஷ் கணேசன்

முதல்: பதிப்பு செப்டம்பர் 2024
விலை: ரூ.100/-
வெளியீடு பொள்ளாச்சி இலக்கிய வட்டம்
தொடர்புக்கு: 9940973861


வாழ்வின் அனுதினப்பாடுகளிலிருந்து கவிதைகளை உருவாக்குபவன் காலத்தால் நிலைத்து நிற்கிறான். இயற்கையை ரசிக்கும் மனம் தனது சினத்தையோ வலியையோ நமக்குள் கடத்துவதாய் அமைத்திடும் கவிதைகளுக்கு பார்வைகள் விரிவடைகின்றன. மழலையின் புன்னகையைப் போல குடிசைக்குள் கொட்டும் புதையலைக் கண்ட ஏழையின் வாழ்வைப் போல வழியறியாத் தேடலில் இளைப்பாற்ற நிற்கும் சுமைதாங்கியைப் போல இந்த ஊர்க்குருவியின் பயணம் நம்மை அழுகைக்கும் புன்னகைக்கும் நடுவில் நிறுத்தி வைக்கிறது.

## தாய்க்குருவி

தேவதைகளுக்கு
தாங்கள் தேவதைகள் என்பது
ஒரு நாளும் தெரியாது

உயிர்களின் வாழ்வியலின் அடிநாதமான தாய்கள் ஒய்வில்லாது உழைப்பின் வழிச்செல்கையில் தம்மை ஒருபோதும் கண்டு கொள்வதில்லை.

## அவ்வளவுதான் அழுகை




இன்றோடு
மூன்றாவது நாள்
ஆகிவிட்டது
வந்து போனவர்கள்
எல்லாம்
வருத்தத்தின் பெயரில்
தேக்கி விட்டுப்
போன
கண்ணீரினை
எந்தவித முகச்சுழிப்பும் இல்லாமல்
வாலியில் வாரி வாரி
இரைத்துக் கொண்டிருந்தேன்
அப்போது தான் கண்ணில் பட்டது
எந்தக் கண்ணீரிலும்
ஈரம் இல்லை

நின்று பேசக்கூட நேரமற்ற ஓட்டத்தில் எல்லாமே போலிமயமாகிவிட்டது என்பதை ஈரம் உணர்த்தி விடுகிறது.

## காட்சிப் பிழை

அது
எவ்வளவு அழகு தெரியுமா
உனக்கே தெரியாமல்
உன்னை நான் பார்ப்பது
இது
எவ்வளவு அவஸ்தை தெரியுமா
உனக்குத் தெரிந்தும்
என்னை நீ பார்க்காதது.

## ரெட் ஆப்பிள்

ஒரு தொழுநோயாளிக்குக்
கொடுக்கப்பட்ட

கடைசி உணவிலும்
தோல் உரிக்கப்பட்டே இருந்தது
சிவப்பு ஆப்பிள்.

நோயின் வலியும் நோயாளியின்
வேதனையும் கலந்து வாசிப்போரை
கண்ணீரில் நனைக்கிறது இக்கவிதை.

## சின்ன பைரசி டவுசர்

கடற்கரையில்
விளையாடிவிட்டு
வீடு திரும்பும்
சிறுவனின் டவுசரில்
ஒரு சிறு கடல்
கொஞ்சம்
சில்லறை மணல்.

நம் பார்வையில் தட்டுப்படும் சிறுவர்கள்
ஏதோ ஒரு விதத்தில் தன்னை
அடையாளப்படுத்தும் செயல்களின்
வழியே நம் கவனத்தை ஈர்த்துவிடத்
துடிப்பார்கள். கடலும் இங்கே
சிறுவனோடு சேர்ந்து நம்மைக் காண
வந்து விடுகிறது.

நாற்காலியில் அமர்ந்திருக்கும் நரிகளுக்கு
காவல் காக்க
நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதாம்
கர்சித்த சிங்கங்கள் சில

சமகால அரசியலையும் மக்களின்
நிலையையும் வெளச்சமிடுகிறது இந்த
வரிகள்.

## மூன்றாம் கண்

மொட்டை அடித்திருந்த
ஒற்றைப் பாறையின் மீது
இரண்டு கைகளையும் விரித்து
வில்லாய் வளைந்து வளைந்து
சடைமுடியால் காற்றைக் கிழிக்கும்
அந்தச் சிறுமியை விட
அழகாய் பறக்கும்
பறவையை நான் பார்த்ததில்லை.

அழகானதொரு காட்சியின்வழியே
சிறுமியின் உற்சாகச் சித்திரத்தை வரைந்து
செல்கிறது.

## இரட்டைச் சதம்

ஒரே நேரத்தில்
நீங்கள்
வாழ்வதற்கும் சாவதற்கும்
தயாராகினால்
காதல் செய்யுங்கள்

## உருவுகண்டு

எல்லாம் முடிந்துவிட்டது
என்று முழக்கமிட்டு கொண்டிருக்கும்
அந்தக் கூட்டத்தைக்
கண்டால் சொல்
வரும்போது
கிளையை ஆட்டிய காற்று தான்
போகும்போது
மரத்தையே
பிடுங்கி வீசிவிட்டது என்று.

யாரையும் எந்தச் சூழலிலும் குறைத்து
எடைபோட்டால் அடையும்
விளைவுகள் கணக்கற்றுப்போகக்கூடும்.

## காடு = பறவை

எந்தப் பறவையும்

காட்டை வெட்டுவதில்லை
கூடு கட்ட

இயற்கையை வாழ்வதற்கான வழியாக
எடுத்துக்கொள்ளாமல் பேராசைக்கான
பாதைக்காக தடம் மாற்றும் மனிதனின்
போக்கு அவனுக்கே அழிவைத்
தந்துவிடும்.

## சிரி சத்தமாகச் சிரி

சிரித்துக் கொண்டே
காகித கப்பல்கள் விடும்
குழந்தையிடம் இது
மழையின் அழுகை என்று சொல்லி
நான் தடுக்கப் போவதில்லை
எனக்கு அழுகையை விட
சிரிப்பு முக்கியம்.

கவலையில் விழாத மனிதன் என்று
யாருமில்லை.கவலையையே கவனித்துக்
கொண்டிருந்தால் வாழ்வின் நகர்தல்
நரகமாகிவிடும்.வாழும்போதே
சிரிப்பால் எல்லோர் இதயத்தையும்
நிறைத்திடும் மனதோடு
வாழ்ந்திடுவோம்.

## வாழ்க்கை

அப்படி என்ன இருக்கிறது
அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை
அப்படி இருந்தால் தான் என்ன?

வாழ்க்கைக்கான வரையறை என்று
ஏதேனும் உள்ளதா என்ன? எதுவுமற்ற
வெளியிலும் சிறகை நம்பி வானமளக்கும்
பறவையென எண்ணங்களை உயர்த்திக்
கொண்டால் நமக்கான வாழ்வு நதியின்
வரலாறென நிலைத்துவிடக்கூடும்.

எளிய சொற்களில் ஆழமான
கருத்துகளைப் புகுத்தி நமக்கான
வாழ்வின் கண்ணாடியென நமக்கே
உணர்த்திச் செல்கிறது ஊர்க்குருவி.

—

## இளையவன் சிவா

---

# துளிப்பாக்கள்

உயிர்ப் பிரிதல் மட்டுமல்ல
மனசு இறப்பது கூட
மரணம்தான்.

மேலெழும் அனைத்தையும்
தன்வசப்படுத்துகிறது
ஈர்ப்புவிசையால் பூமி.

ஒட்டு மொத்த பாரத்தையும்
தன் வசம் கொண்டிருக்கிறது
வேர்கள்.

எரியும் மெழுகுவர்த்தி
தனித்து எதிர்க்கிறது
இருட்டை.

புல்லில் பூத்த
ஒற்றைப் பனித்துளியில்
புள்ளியாய்ப் பிரபஞ்சம்.



சப்தமின்றி
பொழிகிறது
பனியும் சாரலும்.

உயிர் பிரிதலும்
சுடர் அணைதலும்
காணக்கொடுமை.

சாகாவரம் கேட்கும்
அனைவருக்கும் சாகும்
வரமே அருளப் படுகிறது.

எந்தச் சொற்கள் வரிகளில்
விழுகின்றனவோ அந்தச் சொற்களே
கவிதையின் விருப்ப வரிகள்.

நாக்கை நீட்டிபடி
பையில் திணித்த பேனா
கக்கியது நீலரத்தம்.

மழை நின்றதும் மகிழ்ச்சியில்
ஆனந்தக் கண்ணீர்
வடிக்கும் மரங்கள்.

விலையாக வேண்டுமெனில்
உடல் பருத்தே ஆகவேண்டும்
பலூன்கள்.

—

கவிதை ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம், பேச: 9443139353

---

**ஹரிதா,**
**5ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா, மன்னார்குடி**



**நிகிதா,**
**5ஆம் வகுப்பு, ஸ்ரீ பாரதி வித்யாலயா, மன்னார்குடி**



# குறுங்கவிதைகள்

பூமிக்கு காய்ச்சல்
வைத்தியம் பார்க்கின்றன
மரங்கள்

தாமரையைப் பறிக்க
நனையாமல் கரையேறுகிறது
மேகம்

கிளை முறியும் ஓசைக் கேட்கிறது
குப்பைத்தொட்டியில்
காகிதம்

தேர்ந்தெடுத்த சொற்களைக்
கொண்டு சமைக்கிறேன்
இனிக்கிறது கவிதை

மழைத்துளி விழுந்ததும்
முளைக்கத் தொடங்குகிறது
மண்வாசனை

சோகத்தையெல்லாம்
அடியோடு இறக்கி வைக்கிறது
பறை

நள்ளிரவில் கவிதைகள்
எனக்கு மட்டும் கேட்கிறது
கனவு

பூக்களைப் பறிக்கிறேன்
முறைக்கிறது
பட்டாம்பூச்சி

—



பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 6380704001

---

# நிலம்

மூடியை திறந்து பார்த்த போது
பானை
எனது பிம்பத்தை விழுங்கி இருந்தது

கைத்தவறி விழுந்து
உடைந்த பானை தான்
கோடைகாலத்தில் தண்ணீர்பந்தல்
வைக்க உதவியிருக்கிறது...

உடைந்த துண்டுகள்
ஒவ்வொன்றிலும் முழு நிலவை ...
கையருகே காட்டியிருக்கிறது.

பானை உருபெற
மிதிவாங்கிய
அதே மண் தான்
ஆறடி குழிக்குள்
எனக்காக காத்திருக்கிறது.

—

சாயிராம்,
தஞ்சாவூர்,
9443394625.

# கருணையை பிடுங்கிக் கொண்டு

கவனத்தில் வைத்து விடாமல்
கணக்கற்று நகரும் வேக யுகத்தில்
நிதானத்தை உடைத்து விட்டு
நிம்மதியைத் தேடும் யாத்திரையின்
குரூர நகர்வில்
பரிதவிப்பை புறம் தள்ளி
பரிவுகளும் பச்சாதாபங்களும்
புதைகுழிக்குள் விழுந்து கிடக்கும்
அவசர ஓட்டத்தில்
நீளும் கரத்தை ரணமாக்கி
நாளும் பொழுதும் நம்மை இம்சித்து
தட்டி விடும் விசாரணையில்
அன்பின் அழுகையை நிராகரித்து
அடுத்தடுத்த காரியங்களில்
நமை நுழைக்கும்
பணி இலக்குகளில்
உனக்கென்ன வந்ததென்றும்
உதவியினால் ஒன்றும்
மாறப்போவதில்லை என்றும்
ஓயாது அலறும் குடும்ப நச்சரிப்பில்
வேறென்ன செய்வது
வேடிக்கை பார்ப்பதும்
வாய்ப்பு கிடைத்தால்
சுயமிகள் எடுத்தும்
விலகிப்போவதைத் தவிர
எதிரே நடக்கும் விபத்தின் தருணத்தில்.

## நேரத்தின் வேட்டைக்குள் சிக்குண்டு

தீராப்பசியென தின்று தீர்க்கிறது
இரவைப் பகலும்
பகலை இரவும்
ஆசைகளின் சாட்டைக்குள்
அகப்பட்டாடும்
அடங்கா மனதைப் போல.

## காட்டாற்று வெள்ளத்தில்

கரை சேரக் துடிக்கும்
கடைசி முயற்சியும்
கைநழுவிப் போகையில்
எட்டிப் பார்க்கும்
மரக்கட்டையைப் போல
எப்போதும் வாய்ப்பதில்லை
என் உயிர்ச்சுனை நிரப்பும்
உன் ஒற்றை முத்தம்.

## மேனி எங்கும் கீறிக்கீறி

கொப்பளிக்கும் இரத்தத்துளிகளில்
சூரியப்பார்வை தீண்டல்களால்
எரியும் புண்ணாய் அலறிய போதும்
விழும் விதைகளை
மடியில் ஏந்தி
உயிர்கள் மடியாதிருக்க
மகசூலைத் தருகிறது மண்
மனிதன் உணர.

## சும்மா இருக்கும் காற்று

ஊஞ்சலாடும் கிளையில்
உட்காரும் பறவையைக் கண்டதும்
வானுக்கும் பூமிக்கும் என
உற்சாகத்தில் தூது போகிறது.
காற்று தானே என கண்டும் காணாமல்
இருந்த பறவையின் சிறகுக்குள்
நிரம்பி எழுகிறது வளி.

கிளைக்கும் வானுக்குமென
பறக்கும் சாகசத்தில்
பரிதவிக்கிறது
கூடு காணவந்த பறவை.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



## நிலைக்குத்தி நிற்கும்

கனத்த மதில்களில்
அகண்ட பெருவானங்கள்
மெதுவாய் ஆழப்
புணரும் சாரலின்
நசநசப்பில்
உதிர்த்து விடும்
சாணிப்பக்குகள்
பூத்து அப்புகின்றன
கூரை கிழிந்த வீட்டின்
உறங்காத
நெடிய இரவுகளில்...

## சிகப்புச் சகதி

அப்பிக் கிடக்கும்
தார் சாலையில்
பொடிமணல் போட்டு
கூர்தீட்டிய
அருவாக்களால்
கணுக்களாக்கப்பட்ட
பிண்டங்கள்
அனாமத்துக் கிடைக்கையில்
காத்துக்கிடக்கிறது
மஞ்சள் நிலா..

## கருவேலம் நெற்றுக்கள்

வெடித்துப் பரவிய
காட்டுக்கருவை வனத்தில்
கோதியலையும்
கூதக்காற்று
சடசடத்துப் போகையில்
தூரத்து
செம்போத்தாய்
கூவியழைக்கும்
அவளின்
பூ விரல்களை
இறுகப்பற்றியணைத்து
இளைப்பாறி விதைக்கும்
ஈரமுத்துங்கள்
உதட்டின் சுவடுகளில்
உறைகல்லாய் படிகிறது
இதயத்தின் குவிசொற்கள் ...

## கிணற்றடியில்

நினைவுகளைக் கிளப்பி
துவைத்துக் கொண்டிருக்கும்
வெள்ளந்தி அப்பாவிடம்
முத்தத்தை நடவு செய்யும்
வண்ணத்துப்பூச்சியின்
தூரத்து வாசனையை
சுழியெழுப்பி

நிமிரும்
புழுதிக் காற்றுக்கிடையில்
ஒற்றைப் பனையிலிருந்து
லயித்துக் கொண்டிருக்கிறது
இளைப்பாறும் சுடரொளி...

குருதிப் பிசுபிசுப்புகள்
திரளாய் அப்பி
படிந்து கிடக்கும்
பெருந்தெருக்களில்
இனக்குழுக்களின்
சாதிக் கனல்

தாழ்ந்து கிடக்கும்
மேட்டுக்குடிகளை
பெருங்காற்றின்
அபத்தமாய் கூடி
சுட்டெரிக்கிறது
அப்பழுக்கற்ற
மனிதர்களை...

—

அய்யனார் ஈடாடி

---

# ஊன்றுகோல்

"அதியமானைத் தேடி ஔவையார் வந்திட்டுருக்காங்க!" என்று குறும்புச் சிரிப்புடன் வாசலைப் பார்த்தபடி சொன்னாள் என் மனைவி வசுந்தரா. சில நேரங்களில் வசுந்தரா புத்திசாலித்தனமாகப் பேசுவதும் உண்டு!

"யாரு மீனாவா?" என்றேன் முகமெல்லாம் பூரிக்க.

இன்றா நேற்றா இருபது ஆண்டுக்கும் மேலான சிநேகிதம் அல்லவா? மீனா என்ற பெயரைக் கேட்டதுமே மனசு துள்ளுகிறதை உணர்கிறேன்.

ஒரு ஆணும் பெண்ணும் நீண்ட காலம் நட்பு கொண்டு இருப்பது சாத்தியமா என்று கேட்கிறீர்களா? சாத்தியம் என்பதை நானும், மீனாவும் இருபது ஆண்டுகளாய் நிரூபித்து வருகிறோம். காதலில் தான் காமம் மண்ணாங்கட்டியெல்லாம். நட்பில் அதெல்லாம் ஒன்றும் வருவதில்லை நட்புக்கு அடிப்படையாக இருப்பது ஒத்த தொழிலோ வசதியோ வயதோ அல்ல. வாழ்க்கை நிலையில் பல்வேறு மரியாதையுடன் இருப்பவர்கள் இடையிலும் பிரிக்க முடியாத நட்பும் பாசமும் ஏற்படுவதைப்பார்க்கிறோம். இதில் பால் பேதங்களும் இடைப்படுவதில்லை கொடுப்பதும் பெறுவதும் ஒன்றேயாகின்ற காமம் போன்று ஆன்மாவின் அந்தரங்க ஆழத்தில் ஈருயிர்கள் சங்கமிப்பதே உயர்ந்த நட்பின் அடிப்படை என்று நினைக்கிறேன்.

குடும்பமுடன் கோடை சுற்றுலா என்று நான்கு மாதம் அமெரிக்கா போனவள் இன்றைக்குத் தான் என்னைப் பார்க்க வந்திருக்கிறாள்.

மீனா வீட்டிற்குள் நுழைகிற போதே சாதிமல்லிகை வாசம் தூக்கி அடிக்கிறது. தினம் ஒருகிள்ளு சாதிமல்லிகை தலையில் இல்லாவிடில் மீனாவிற்கு முகமே கலை இழந்துவிடும். அவள் கணவர் அலைந்து திரிந்து வாங்கி வந்து விடுவாராம்! இன்றைக்கு மல்லி கிள்ளலாய்த் தெரியவில்லை. பெரிய பந்தை வைத்த மாதிரிகும் என்று தெரிந்தது. அதில் மீனாவின் மன வாசமும் புரிந்துபோக," வா மீனா! 'பூ'லோகமே தலைல இருக்கு, என்ன சிறப்பு?" என்று கேட்டேன் சிரித்தபடி.

மீனா வாயைத்திறப்பதற்குள் முந்திரிக் கொட்டையாக, வசுந்தரா," நான் சொல்றேன்! நான் சொல்றேன்!"என்றாள் சின்ன குழந்தை மாதிரி.

"சொல்லுங்க வசு, என்னனு சொல்லுங்க பாப்போம்?" மீனா ஓரக்கண்ணால் பார்த்தபடி குறும்பாய் சிரித்தாள்.

"உங்க பொண்ணு 12ஆம் வகுப்பில் நல்ல எடுத்து தேர்வாகி இருக்கா"

"ம்ம் இன்னும் முடிவு வரலை"

"உங்க வீட்டுக்காரரருக்கு அலுவலகத்துல பதவி உயர்வு?"

"க்கும்... ஆறு மாசத்துக்கொரு தடவை பதவி உயர்வு கொடுத்தா அந்த அலுவலகத்தை இழுத்துதான் மூடணும்".

"அப்போ புது மகிழுந்து வாங்கி இருக்கீங்க!"

"இல்ல இல்ல.. பழைய மாருதியே வீர மாருதி, கம்பீர மாருதியா விசுவாசமா உழைக்குது சரி, நானே சொல்லிடறேன் என்னன்னு.. என் கவிதைக்கு முதல் பரிசு கிடச்சிருக்கு இணையதளத்துல ஒரு குழுமம் நடத்தின போட்டில".

உற்சாக நயாகராவாய் இப்படிச்சொன்ன மீனாவை வியப்புடன் பார்க்கிறேன்.

"வெகு சிறப்பு! வாழ்த்துகள்! இந்த மாதிரி ஒருகவிதை எழுதிட்டுதானே என்னை நீ முதன் முதலில் பார்க்க வந்தே? இருபது ஆண்டு முன்னாடி என் ஊடக அலுவலத்திற்கு வந்ததும் ஆசிரியர் யார்னு கேட்டு என் அறைக்கு வந்து என் மாத இதழை அக்குவேறு ஆணி வேறாப் புரட்டி அலசி விமர்சனம் செய்தபோதே உன் அறிமுகமும் பிறகு நட்பும் கிடச்சிது மீனா!

அப்போ நீ கல்லூரி மாணவி! சரியான வாயாடி ஆனா புத்திசாலி வாயாடி!" என்று சொல்லி சிரித்தேன்.

"இல்லேன்னா உங்களோட நட்பு எனக்கும் கிடச்சிருக்குமாக்கும்.?"

"போதும் போதும்... நாலு மாசம் என்னை விட்டுட்டு குடும்பத்தோட ஊர் சுத்தப் போயிட்டியாம்.. சரியா அப்போ

பாத்து உடம்புக்கு வந்து வீட்ல சிறை மாதிரி அடைஞ்சி கிடக்க ஆரம்பிச்சிட்டேன்.."

"அடடா எடிட்டருக்கு என்ன ஆச்சு? இதுக்குத்தான் மின்னஞ்சல்ல தொடர்பு வச்சிக்கணும் என்கிறது. கணினியை தொடவே மாட்டேஙக்றீங்க நீங்க?"

"ஆமா... அதைக் கட்டிட்டுதான் உலகத்துல பாதிபேர் அழறாங்களே! கணினி கீழ்ப்படிந்தது, ஆனால் புத்திசாலி இல்லை!"

"சரி விடுங்க சில விடயங்களில் அசாத்திய பிடிவாதம்தான் உங்களுக்கு"

"காஃபி கலக்கறேனே மீனா" என்று சமையலறைபோக நடந்தவளை தடுத்தாள் மீனா.

"வேண்டாம் வசு... அமெரிக்கால் ஸ்டார்பக் ல ஒரு கோப்பர்ச்சினா காஃபி குடிச்சப்றம் நம்மூர் காஃபியே பிடிக்கல... அதிருக்கட்டும் வசு என்னதான் ஆச்சு இந்த மனிதருக்கு?"

"அதையேன் கேட்கறீங்க மீனா.. நல்லாத்தான் இருந்தாரு, சடனா மஞ்சள் காமாலை வந்திட்டது... ஏற்கனவே நாலு ஆண்டு முந்தி மாரடைப்பு வந்து பிழைச்சாரில்லையா? நீங்க கூட அப்போ மருத்துவர் சொன்னார்னு உங்க நண்பருக்கு தேக்குல நல்ல வேலைப் பாடெல்லாம் செஞ்ச கைத்தடி வாங்கிக் கொடுத்தீங்களே.....?

"ஆமாமாம் ஐயா அதை முதல்ல பயன்படுத்தவே மாட்டேன்னாரே! படுகிழவன்னு நினச்சிட்டீங்களா என்னை, ம்? அப்படின்னு கேட்டு முறைச்சாரே? நான் தானே அப்போ, அழகா அந்நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே நண்பனே ன்னு உயர்ந்த மனிதன் படத்துல சிவாஜி கணேசன் கைத்தடியோட பாடிட்டுவர்ர மாதிரி இருக்கீங்கன்னு சொன்ன பிறகுதான் ஒத்துக்கிட்டார் அப்றோம் அஞ்சு ஆண்டு அது கூடத்தானே கம்பீரமா வாழ்ந்திட்டு இருக்காராம்! ஆரம்பத்துல தேவையா இருந்தது, இப்போ அலங்காரம் போல ஆகிட்டது! கேட்டா ஆமா இது இல்லேன்னா நடைதள்ளாடுது என் அவயங்களில் ஒண்ணாகிட்டதுன்னு ஒருதடவை சொன்னாரே!".

"கொஞ்சம் என்னைப் பேச விடறீங்களா பெண்மணிகளா?" என்று குறுக்கிட்டு அனுமதி கேட்டு நான் சொல்ல ஆரம்பிக்கிறேன்

"மஞ்சக் காமாலை என்கிறது பொதுவா குழந்தைகளுக்குத் தான் வரும் ஏதாவது மந்திரிப்பாங்க சரியாய்டும். இதைதான் நான் பார்த்திருக்கேன் இப்படி ஐம்பது வயசை நெருங்கறவனுக்கும் வரும்னு என் அனுபவத்துலதான் தெரிஞ்சிட்டேன். மஞ்சக் காமாலை வந்ததும் ஆளுக்கொரு யோசனை சொல்ல ஆரம்பிச்சாங்க... பத்தியம் சொன்னாங்க. கீழா நெல்லி விழுதை எலுமிச்சங்கா அளவு ஒவ்வொரு வேளையும் விழுங்கினேன். அச்சுதன் நம்பூதிரி கிட்ட போயி

மந்திரிச்சிட்டேன். வீட்டிலேயே ஒருத்தர் வந்து குவளையில ஊசிகளைப் போட்டு மந்திரிச்சார். அந்த குவளை தண்ணீர், மஞ்சள் நிறமாக மாற மாற காமாலையும் இறங்கிடும்னு சத்தியம் பண்ணினார். தண்ணீர் ஊசி எல்லாம் அப்படியேதான் இருந்தது.

அப்புறம கோமியோபதி வைத்தியம் ஆரம்பிச்சி இப்போ தேவலை. இதுல ஆகார நியமனம் நாலு மாசமா செய்துட்டு வந்து, இப்போதான் உடம்பு கொஞ்சம் நிலைக்கு வந்திருக்கு••• இன்னும் வெளி உலகம் இதழ் அலுவலகம் போக ஆரம்பிக்கல.. எல்லாத்தியும் உதவி ஆசிரியர்தான் பாத்துக்கிறார்••• ஓகோன்னு  பிரமாத மக்களுக்கு பிடித்த இதழ் நடத்தலேனாலும் இருபத்தி அஞ்சி ஆண்டு நடத்தும் இலக்கிய மாத இதழை நிக்காம நடத்திட, என் உடம்பு பழையபடி ஆகிடணும்! ஆகிடும்! இன்னும் இரண்டு வாரத்துல அலுவலகம் போக ஆரம்பிச்சிடுவேன்.. ஆனா இந்த மாதிரி நேரத்துல ஆதரவா யாராவது பக்கத்துல இருந்து பேசிட்டு இருந்தா போதும்னு இருக்கு மீனா!"

"வாசுதவம் தான் ஆனா இப்போ எனக்கு நேரமே இல்லயே!... அடுத்த வாரத்துல ஒருநாள் கண்டிப்பா வந்து கொஞ்ச நேரம் இருக்கேன்••• உடம்பை பாத்துக்குங்க••• ஓய்வு எடுங்க அதான் முக்கியம் வரட்டுமா? வசு! போய்ட்டு வரேன்".

மீனா சாதிமல்லி மணத்தை விட்டு விட்டு கையசைத்தபடி வாசலுக்கு விரைந்தாள். இத்தனை நாள் கழித்து வந்தவள் இன்னும் அரை மணியாவது இருந்திருக்கலாம்.

மீனா போனதும் மறுபடி வெறுமை சூழ்கிறது.

பழைய நண்பர்கள் சிட்டு அனந்தகுமார் பத்ரி என்று யாராவது பேச வரமாட்டர்களோ? எல்லாரும் ஆரம்பத்தில் உடம்பு சரி இல்லையென்றதும் வந்து பார்த்து பேசினதுடன் சரி. பிறகு பத்து நாளைக்கு ஒரு முறை என்றும் கடைசியில் மாசம் ஒருதடவை என்றும் வந்தவர்கள் சமீபமாய்வரவே இல்லை. அலைபேசியில் கடமைக்கு விசாரிக்கிறார்கள். எல்லாரும் ஏதோ ஒரு விதத்தில் தொடர் பணியில் இருக்கிறார்கள் எனக்குத் தான் பேச்சுத் துணைக்கு யாரும் இல்லை. மீனாவுக்கே என் மீது அக்கறை இல்லை அப்புறம் இவர்களையெல்லாம் என்ன சொல்ல?

வீட்டில் படுத்த படுக்கையாய் கிடப்பது என்பது ஓர் அனுபவம். வெளி உலகையும் தொழில் லாப நட்டங்களையும் பற்றி ஆரம்பத்தில் சில நாள் கவலைப்பட்டது உண்மை. இப்போது அவையெல்லாம் மனத்தை விட்டு போய் விட்டபடியால் யாருடனாவது வாய் விட்டுப் பேசிக் கொண்டிருக்கலாம் போன்றே தோன்றுகிறது.

பகல் பத்து மணிக்கு மருந்து பதினோரு

மணிக்கு கஞ்சி, நாள் முழுவதும் சாத்துக்குடி ரசம், இடையிடையே இளநீர் கரும்புச்சாறு என்று ஆகார நியமனம் இன்னும் சில நாளைக்குத் தொடர வேண்டுமாம்.

சமையற் கட்டிலிருந்து எதையோ மறந்து விட்டு வந்தவள் மாதிரி பரிதவிப்புடன் கூடத்திற்கு வந்தாள் வசுந்தரா. கையில் கஞ்சி பாத்திரத்தின் மூடியை சரியாகப் பொருத்தி மேசை மீது வைத்தபடி," கஞ்சி தயாரா இருக்கு••• மணி பத்தே முக்கால் ஆகுது.. பதினோறு மணிக்கு குடிச்சிடுங்க நான் கொஞ்சம் கடைவீதி வரைப் போய்ட்டு வந்துடறேன் "என்றாள்.

வசுந்தரா போனதும் வாரப் இதழை புரட்டினேன் புத்தகம் நல்ல நண்பன். வாசிப்பு சுவாசிப்புதான் ஆனாலும் உயிர்த் துடிப்புள்ள மனித அருகாமையின் முன்பு இதெல்லாம் உயிரற்ற பொருள்தானே?

ஞாயிற்றுக் கிழமைதானே இன்றைக்கு, பத்ரியாவது வந்து பேசிக் கொண்டு இருக்கலாம் இல்லையா? வந்த மீனாவும் ஓடிவிட்டாள்.

கோபத்தில் கஞ்சி குடிக்கவும் மறந்துவிட்டது பிடிக்கவும் இல்லை என்றும் சொல்லலாம்.

மணி 11:30

இந்த வசுந்தரா எங்கே போனாள்?

வேலை வெட்டி இல்லாமல் ஆண்கள் வீட்டில் இருந்தால் வீட்டுப் பெண்கள் தரும் மரியாதை இதுதான் போலிருக்கு.?

எரிச்சலுடன் வாசலுக்கு மெல்ல நடந்து வந்து வராண்டா சோபாவில் உட்காருகிறேன் கைதடியை கோபத்தில் எடுத்து வரவில்லை திரும்ப கைத்தடி இல்லாமல் வந்த மாதிரி போக முடியாது போலிருக்கிறது. வேறு வழியின்றி. திறந்து கிடந்த வாசல் கதவு வழியே சாலையை வேடிக்கை பார்க்கிறேன். பெரும்பாலும் மக்கள் பேசிக் கொண்டேதான் நடந்து கொண்டிருக்கிறார்கள் கைபேசியில் பேசிக்கொண்டே!

மணி 12 இருக்கும்•••

படபடக்கும் வெய்யிலில் வசுந்தரா கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையோடு வீட்டிற்குள் வந்தாள்.

வராண்டாவில் என்னை பார்த்தும் "என்ன இங்க வந்து உக்காந்திட்டிங்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றேன் விறைப்பாக

என்னருகில் கைத்தடி இல்லாததுகண்டு திகைத்தாள்.

"உங்களுக்கு ஊன்றுகோலா இருக்கிற கைத்தடி இல்லாமயா இவ்வளவு தூரம் வந்தீங்க? திடமா எதுவும் சாப்பிடாம உடம்பு வீக்கா இருக்கிறபோது இப்படி நடந்து வரலாமா நீங்க? ஆமா கஞ்சி

குடிச்சீங்களா? உங்களுக்காக வழக்கமா கருப்பஞ்சாறு வாங்க போன இடத்துல கிடைக்கல.. கடையை எடுத்திட்டாங்க போல இருக்கு. கரும்பும் இப்போ சீசன் இல்லையாம் எங்கயும் கிடைக்கல.. விடுவேனா? அங்க இங்க அலஞ்சிச் திரிஞ்சி வாங்கிட்டு வர இவ்வளவு நேரமாச்சு.. வழில கமலா பிடிச்சிட்டா விட்டுடிம்மா வீட்ல அவரு தனியா இருக்காரு பேச்சுத் துணைக்கு யாரும் இல்லாமன்னு அவளை உதறிட்டு ஓடி வந்தேன்.. சரிசரி... உள்ளவாங்க கருப்பஞ்சாறு குடிக்கற டைம் இப்போ... அப்புறம் மூணு மணிக்கு சாத்துக்குடி ரசம் கொடுத்திடறேன்.. சாத்துக்குடிப் பழம் நேத்தே நிறைய வாங்கி வச்சிட்டேன்...."

மூச்சு விடாமல் பேசிக் கொண்டே வந்தவள், நான் மௌனமாய் அமர்ந்திருக்கவும்," என்னைப் பிடிச்சிட்டு நடந்து வாங்க... கைத்தடி இல்லேன்னா என்ன அதான் நான் இருக்கேனே? என்றாள் இதமான குரலில்.

வெளியே எதையோ தேடிக் கொண்டிருந்த என்னை கைத்தாங்கலாய்ப் பிடித்தபடி உள்ளே அழைத்து வருகிறாள்.

—

ஷைலஜா

---

# அப்ப மட்டுமல்ல...

பணி கிடைக்காமால்
சிரமப்படுகிறவர்களுக்கு
மட்டுமல்ல
பகல் முழுவதும்
நீள்வது

வார விடுமுறையில்
பொழுது போக்கு
விருப்பமற்று
உறவிடத்தோ
தோழமைகளிடத்தோ
பேசாமால்
யோசிப்பும் இல்லாமால்
என்னவென்றே தெரியா
இனம் புரியா
மனம் முழுவதும்
வெறுமை சூழ்ந்திருப்பவர்களுக்கும் தான்

உடல் வேதனையில்
இருப்பவர்களுக்கு
மட்டுமல்ல
இரவு பொழுது நீள்வது

சுற்றி சுற்றி
நேற்றைய
இன்றைய
அவமானங்களை
வசை மொழிகளையும்
எண்ணியும்
நாளைய பொழுதை
எண்ணி யோசித்து
யோசித்து
பயம் பதற்ற பொழுதுகளை
காட்சியாய் கொண்டு

புத்திக்கும் உடலுக்கும்
ஒய்வு கொடுக்காமால்
இருப்பவர்களுக்கும் தான்

## அங்கும் இங்கும்

வேண்டப்பட்டவர்களின்
நெருக்கமானவர்களின்
பிறந்த நாளுக்கோ
குடும்ப விழாவுக்கோ
வெற்றிக்கான பாராட்டோ

நம்மிலும்
நெருக்கமில்லாதவர்கள்
முந்திக்கொள்கையிலும்
நாம் தாமதமாயிகையிலும்
பெறுபவர் மனதில்
நமக்கு முக்கியத்துவம்
இல்லையோ
என்ற ஆதங்கமும்

நமக்கான
நியாயங்களாய்
சொந்த விஷயங்கள்
பற்றிய
சந்தோஷமோ
வருத்தமோ
அடுத்தவைகள் பற்றிய
யோசனையோ
அந்த கணத்தில்
நிறைய ஆக்ரமித்ததால்
தாமதம் என்று

## அந்த கணத்து நிகழ்வுகள் மட்டுமே..

உணவோ
பொருள் சேர்க்கையோ
கேளிக்கையோ
சுற்றுலாவோ
உரையாடாலோ
சந்திப்போ
உற்று நோக்குதலோ
தனிமையோ

விரும்புகின்ற
கணத்தில் நிகழும்
போது மட்டும் தான்
உச்சபட்ச
உவகை கிடைக்கிறது

## பின்னருக்கான

இன்றைய
சூழலில்

துல்லியமாய்
போட்ட திட்டமும்

சரியாய் அமைந்த
செயல் பயணமும்

விளைவாய் அமைந்த
நல்ல முடிவும்

அதனால் கிடைத்த
பாராட்டும்

ஞாபகச்செல்களில்
மிகப்பத்திரமாய்

நாளைய
தடுமாற்றங்களுக்கு
மீள் சுற்றாய்...

## அட இது வேறேயா?

தாமத விழிப்பினால்
அடித்து பிடித்து
பேரூந்து நிறுத்தம்
செல்கையில்
அதுவும் தாமதம்
ஏன்கையில்

இன்றைய செய்பணியே
அதிகம் உள்ளது
பதட்டம் ஆக இருக்கையில்
இது உடனே வேண்டும்
என அவசர ஆணை
வருகையில்

இருக்கின்ற செலவுக்கே
திணறுகையில்
புதிதாய் ஒன்று வந்து
நிற்கையில்

உதவி கேட்க
போகையில்
கேட்டவரே
தானும் அதேயே
கேட்கையில்

இது வேறயா?

## இரண்டுக்குமாய்

எண்ணி மகிழ
நம்பிக்கையாக பகிர

வருத்தமாக புலம்ப
இரண்டுக்குமாய் நினைவுகள்

## இடப்பெயர்ச்சி

வாரநாள் முழுவதும்
பிறர் கொடுத்த
இலக்குகள்
தனக்கே தனக்கான
அழுத்த பணிகள்
செயலுக்கு முன்னான
பதற்றப்பொழுதுகள்

இத்தனையிலிருந்தும்
தற்காலிக
அவசிய விடுதலையாய்
செய்பணியிடலிருந்து
வார விடுமுறையில்
சொந்தமண்
வருவது
உடலின் இடப்பெயர்ச்சி
மட்டும் இல்லை

முற்றிலும்
வேறு
பார்வைகள்
உரையாடல்கள்
உற்று நோக்குதல்
என நிகழ்வுகளின்
இடப்பெயர்ச்சியும்
தான்

## டும்.. டும்...

வெற்றி வேண்டும் எனில்

ஆசை வேண்டும்

ஆசை எண்ணமாக வேண்டும்

எண்ணம் தீர்மானமாக

வேண்டும்

தீர்மானம் இலக்காக
வேண்டும்

இலக்குக்காய் திட்டமிடல்
வேண்டும்

திட்டமிடல் செயல்பாடாக
வேண்டும்

செயல்பாடு இலக்கை அடைய
வேண்டும்

அடைந்த இலக்கு
மகிழ்ச்சி தர வேண்டும்...

## யாருக்குத் தெரியும்?..

மிகத்தீவிர முயற்சிக்குப்பின்
தோல்வி என்பது வேறு

பணி பற்றி அக்கறை இல்லாமால்
செயலற்று
இருப்பது வேறு

இரண்டுக்கும் ஒரே மாதிரி
கண்டிப்பு என்றால்

செய்த முயற்சியையும்
போட்ட உழைப்பையும்
இலக்கை நோக்கிய பயணம்
செய்ததையும்

யார் அறிவார்?

மனசாட்சி தவிர..

## சொல்லத்தான்

காரியம் ஆக வேண்டும்
என்றால் மட்டும்
நல விசாரிப்பு வேண்டாம் என்றும்

இணைந்து செய்த பணியில்
தவறு என்றால்
பக்கத்தில் இருப்பவரை
கைகாட்ட வேண்டாம்
என்றும்

பாராட்டு என்றால்
தன்னை மட்டும்
முன் நிறுத்த
வேண்டாம்
என்றும்

பணி தன்னால்
நடக்க வேண்டும்
என்பதற்காக
இல்லாத தகுதி சொல்லி
பாராட்ட வேண்டாம்
என்றும்

பேசிக் கொண்டிருக்கையில்
பார்வை வேறு பக்கம்
வேண்டாம்
என்றும்

அருகில் இல்லாதவர்
பற்றி விமர்சனம்
வேண்டாம்
என்றும்

நமக்கு தெரியாத

விடயம் பற்றி
பேச வேண்டாம்
என்றும்

உண்மையை
உறுதிப்படுத்தாமால்
கேட்டதை அப்படியே
சொல்ல வேண்டாம்
என்றும்

விமர்சனம்
செயலுக்குத்தான்
தனிமனிதனுக்கு இல்லை
என்றும்

சொல்லத்தான்
நினைக்கிறோம்
மனதுக்குள்

நிஜத்தில்
பெரும்பாலும் இல்லை

காரணங்களாய்

சூழ்நிலையால்
தன்னிலும் வலு உள்ளவர்
என்பதால்
மனம் சங்கடம்
ஏற்படும் என்பதால்
மனப்பக்குவத்தால்

## சுற்றி... சுற்றி...

காலக்கெடுவுகளுக்ள் முடிக்க வேண்டிய
பணிகளில்

தான் செயல் ஆரம்பித்து
பிறர் அதில் தன் செயல் சேர்த்து
பின் அதை முடிக்க வேண்டிய
தருணங்களை நினைத்துப்பார்த்தால்...

## அப்பாப்பா

பிற தினசரிகளில்
கவனமற்று

வேறு பணிகள்
மறந்து

ஆழ்ந்த உறக்கமின்றி

ரசித்து உண்ண வேண்டிய
உணவை இயந்திரமயமாய்
எடுத்துக்கொண்டு

சுற்றி சுற்றி
அதை நோக்கியே
சிந்தனைகள்...

அதன் பெயர் தான்...

புரிந்து கொள்ளாத
அவசரப்பட்டு

கோபத்தை
வார்த்தைகளாலும்
மௌனத்தாலும்

தாக்கப்படுகையில்

பொறுமை கொண்டு
நிதானம் காட்டி
அனுசரித்து
எதிர் வினை உள்ளடக்கி

நடக்க வேண்டிய
காரியம் நோக்கி
பயணிப்பது தான்
மனப்பக்குவம்...

## வழக்கமாகி விட்ட...

வார வாரம் ஞாயிறு
பின் இரவில்
சொந்த ஊரிலிருந்து
செய் தொழில் இடம்
நோக்கி நகர்கையில்
உறவுகளை பிரிவது
ஒரு 'வருத்தம்' என்றால்

இறுதியாய்
அறையிலிருந்து
வெளி வருகையில்
'போய் வா சனிக்கிழமை
சந்திப்போம்'

என
மேசையும்
நாற்காலியும்
அலமாரியும்
கட்டிலும்
வீட்டின் ஹாலும்
முகப்பும்
வழிபாட்டு அறையும்
ஆளுயர பிள்ளையார்பட்டியானும்
மானசீகமாக கூறுவது
வழக்கமான ஒன்று தான்
என்றாலும்
ஒவ்வொரு முறையும்
அளவு குறையாத
இன்னொரு 'வருத்தம்'...

## எண்ணிப்பார்க்க...

சின்னதாய்
இருந்த போது
பார்த்தது

இப்ப ஆள்
வளர்ந்துட்டே

அப்ப எல்லாம்
வாய் ஓயாமால்
பேசிக்கொண்டு
எங்க வீட்டைத்தான்
சுற்றி வருவ

என்கிற போது

அவைகள்
ஞாபக அடுக்குகளில்
சேமிக்கப்படததால்

என்ன தான்
பேசியிருப்போம்

என இப்போது
எண்ணிப்பார்க்க
ஆசை

— *A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



# கனவு

கனவுகளின் தேசம்
கனவு காண்கின்றேன்
கனவு மட்டுமே காண்கின்றேன்
நனவாகும் சாத்தியம்
கவிதை வரிகளில் மட்டுமே

கனவு காணவும்
கொஞ்சம் யோசியுங்கள்
கனவுக்கும் நாளை
வரி விதிக்கப்படலாம்

கனவுகள் காண்பதை
நிறுத்தி வையுங்கள்
கனவு காணும்
உரிமைகள் பறிக்கப்படலாம்

கனவை கவிதையாக்கவும்
கொஞ்சம் யோசியுங்கள்
கவிதைக்கும் நாளை
வரி விதிக்கப்படலாம்

கவிதை எழுதுவதையும்
நிறுத்தி வையுங்கள்
கவிதை எழுதவும்
தடை வரலாம்

வரிகளோடு பயணம்
வரிக்குதிரை அல்ல நான்
வரிகளோடு பயணத்தால்
வலிகளோடு தொடர்கிறேன்

ஆனாலும்
இங்கு சொல்லப்படுவது
இது கனவுகளின் தேசம்
கனவு காணுங்கள்

—

செ. இலட்சுமணக்குமார்,
ஈரோடு.

# சொற்களுக்குள் அடங்கி போகிறது

அவளின் சொல்லானது
ஒவ்வொரு முறையும் மீட்டெடுக்கும்
போது
வன்சொற்களிலோ
மென்சொற்களிலோ
கலந்து கொண்டு போய் விடுகிறது
பெருவானுக்குள் அடங்கிய
நட்சத்திரக்
கூட்டங்களை ஒவ்வொரு முறையும்
எண்ணு முயற்சி
தோற்பது போல அவளின்
மௌனத்திற்குள் அடங்கி கொள்கிறது
ஓராயிரம் கேள்விகள்...

—

ச. சத்தியபானு



# குளிர்

மாய ஊசி
ஆயுதத்தால்
உடலெல்லாம் குத்தி
நெஞ்சை நிமிர்த்துபவனையும்
தனது கைகளாலேயே
அடக்கி வைக்கிறது
குளிர்

வானத்தின் புன்னகை
பூமியெங்கும்
வெள்ளை நீர்ப் பூக்கள்

புல்லின் மேல்
பூகோளத்தை நகலெடுத்து
வரிசையாக
அடுக்கி வைத்து
உடைத்து மகிழ்கிறது
குளிர்

இயற்கை புரட்சியாளர்
குளிர்...
மிரட்டும் அதிகாரியின்
குரலையும்
உடலையும்
நடுநடுங்க வைக்கிறது
தொழிலாளியின் முன்

நட்சத்திர மழை கொட்டி
பூமிக்கு
அணிகலன் சூட்டி
அழகு பார்க்கிறது
வானம்

ஏழையைக் கூட
கோட் போட



வைத்து விடுகிறது
குளிர்
வயிறு மட்டும்
காய்ந்து கிடக்கிறது


எல்லாவற்றையும்
காட்டும் கண்ணாடிக்கும்
ஓய்வு கொடுத்து விடுகிறது
குளிர்

மனிதர்களை மிரட்டி
நெருப்பின் மீது
சத்தியம் செய்ய வைக்கிறது
குளிர்

என்னுள்ளிருக்கும்
வெப்பத்தை
வெளிக்காட்ட வைத்து விடுவதால்
எல்லாமிருந்தும்
குளிரை வரவேற்கிறேன்
இரு கைகளால்

— *சா. கா. பாரதி ராஜா*

காகித கப்பல்: **மா. நிரல்யா,**
இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.



# தைமகளைத் தாலாட்டுச் செய்வோம்! (வெண்பா)

செந்தமிழாள் செல்வமகள்
செங்கதிரோன் செல்லமகள் சொந்தங்கள்
ஒன்றாகச் சொர்க்கமாய் - வந்தமகள்
புத்தாடை தந்தமகள்
புத்தாண்டின் தெய்வமகள்
முத்தாரத் தைமகளே வா!

கொத்துமஞ்சள் மண்பானை
கட்டிவெல்லம் பச்சரிசி
தித்திக்கும் செங்கரும்பு
பூசணிக்காய் - சுத்தப்பால்
மாவிலைத் தோரணங்கள்
மாக்கோலம் சுற்றமோடு
கூவிவைக்கோ லாகலப்பொங் கல்!

துன்பங்கள் தூரவோட
இன்பங்கள் வீடுசேர
தென்னையின் காயுடைத்துத்
தெய்வத்தின் - இன்னருள்
எங்கும் நிறைந்திடவும்
ஏற்றங்கள் சூழ்ந்திடவும்
பொங்கும் புதுப்பானை பூத்து!

வீடெல்லாம் வண்ணங்கள்
வீதியெல்லாம் கொண்டாட்டம்
மாடெல்லாம் தெய்வம் மறத்தமிழ் -
நாடெல்லாம்
நல்லெண்ணம் நன்னெறிகள்
வாழ்வெல்லாம் ஆனந்தம்
எல்லாமும் தைமகள்தந் தாள்!

பாடுபடும் பாட்டாளி
பஞ்சமின்றி வாழ்ந்திடவும்
வீடுவாசல் தோட்டம் விளைநிலம் -
ஆடுமாடு
அத்தனையும் வாய்த்திடவும்
ஆதவனை வேண்டிநின்று
கத்திவைப்போம்
பொங்கலோப்பொங் கல்!

தமிழரின் புத்தாண்டாம் தைமகளே
வாழ்க!
அமிழ்தெனப் பொங்கிவரும் மண்பானை
வாழ்க!
உழவரைக் கொண்டாடும் உன்னதமே
வாழ்க!
பழம்பெரும் பண்பாடே வாழ்க!

ஏழமை நீங்கட்டும் ஏக்கங்கள் ஓயட்டும்
தோழமை ஓங்கட்டும் காயங்கள்
ஆறட்டும்
கல்வி சிறக்கட்டும் செல்வம்
செழிக்கட்டும்
நல்லவைப் பொங்குக நாளும்!

—

பொன். தெய்வா



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.